# வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.

## OS.No. 26/2024

## வழக்கு சாட்சி PW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **இமானுவேல் கிளாட்சன் கார்கடா @ சன்னி கார்கடா** | தொழில் | : வயது முதிர்வின் காரணமாக வேலைக்குச் செல்லவில்லை |
| தகப்பனார் பெயர் | : சாந்தப்ப கார்கடா | கணவர் பெயர் | : ––––– |
| கிராமம் | : பெருமாள்மலை | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 85/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 11.02.2026 |

**முதல் விசாரணை :**

நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன் . வாதி தரப்பு முதல் சாட்சி ஆவேன் . நான் இன்று தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. 18.02.1998 தேதியிட்ட Lease deed நகல் **வா.சா.ஆ.1** ஆகும்.
2. ஆவண எண். 832/1999 ன் நகல் **வா.சா.ஆ.2** ஆகும்.
3. ஆவண எண். 833/1999 ன் நகல் **வா.சா.ஆ.3** ஆகும்.
4. எலிசபெத் பெயரில் செலுத்தப்பட்ட நகராட்சி சொத்துவரி இரசீதுகள் ( எண்ணம் 2) அசல் **வா.சா.ஆ.4** ஆகும்.
5. 10.10.2023 தேதியிட்ட வில்லங்கச்சான்று கணினி நகல் **வா.சா.ஆ.5** ஆகும்.

**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

இந்த வழக்கின் 2ம் பிரதவாதியை நான் தேவையற்ற கட்சிக்காரராக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல . 2ம் பிரதிவாதி அரசு அதிகாரி என்றாலும், அவர் ஆவணங்கள் முறையாக இருப்பின் அவர் அதிகார வரம்பின் கீழ் ஆவணங்கள் பதிவதை நான் கோரியுள்ள பரிகாரத்தின் படி தடுக்கஇயலாது என்றால் சரியல்ல. பத்திரப்பதிவாளர் பத்திரத்தின் வில்லை முறையாக இருப்பின் அவர் மேற்கொள்ளப்படும் பதிவு நடவடிக்கையை தடுக்க இயலாது என்றால் சரியல்ல . ஆவணங்கள் தாவா சொத்து தொடர்பாக பதியக்கூடாது என்றுச்சொல்லி எனது வழக்கறிஞர் மூலம் சட்ட அறிவிப்பு ஏதேனும் அனுப்பினேனா என்றால் இல்லை. நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.02.11 17:59:08 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.